அந்தப் பிரிவில் போதிய பணம் இல்லை என்ற காரணத்தாலே அவர்கள் சரிவர இந்தத் தடுப்பு ஏற்பாடுகளைச் செய்யமுடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்று அறிகிறேன். இந்த காலரா நோய் ஓரிருவருக்கு வந்தால் உடனடியாக வேகமாகப் பரவக் கூடியதாகும். ஆகவே பணம் இல்லாத நிலையில் அந்தப் பிரிவு சரியாகச் செயல்படவில்லை என்பது உண்மையா? அப்படியானால் அதிகமான பணத்தை அவர்களுக்குக் கொடுத்து அந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய நல்ல எண்ணத்தை நான் வரவேற்கிறேன். எந்த வகையில் அதை நிறைவேற்ற வேண்டுமோ அதற்கு ஏற்ப நிச்சயம் நடவடிக்கை எடுப்போம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-00)

(3) ஒழுங்குப் பிரச்னை.

வினா நேரம் இல்லாதிருப்பது குறித்தும் பல வினாக்கள் திருப்பி யனுப்பப்பட்டமை குறித்தும்.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதைப்பற்றிக் கேட்கிறீர்கள்?

திரு. என். கிட்டப்பா: பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார். தலைவரவர்களே, இந்தப் பேரவையில் வழக்கமாக காலை 9 மணி முதல் 10 மணி வரையில் கேள்வி நேரம் ஒதுக்கப்படுவது உண்டு. ஆனால் பல மாண்புமிகு உறுப்பினர்கள் கேள்விகளைத் தந்திருந்தும், குறிப்பாக என்னைப் பொறுத்தவரையில் இதுவரையில் 300 கேள்விகள் . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைத் தலைவர் முதல் நாளே அதைப்பற்றிச் சொல்லியாகிவிட்டது. நீங்கள் சொல்லப் போவதைச் சொல்லுங்கள். அதைத்தான் சொல்கிறீர்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்திருக்கிறோம், ஒன்றுகூட வரவில்லை என்று சொல்கிறீர்கள்.

திரு. என். கிட்டப்பா: இந்தக் கேள்விகள் வராதது மட்டுமல்ல, பல கேள்விகள் வேண்டுமென்றே திருப்பி அனுப்பப் படுகின்றன என்பதை. . .

1977 ஜூலை 14]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதற்கு எதிர்க்கட்சித் தலைவர்தான் உங்களுக்குச் சொல்ல வேண்டும். நான் சொல்வதில் அர்த்தமில்லை. கேள்விகளில் எதை அனுமதிக்க வேண்டும், எதை அனுமதிக்கக் கூடாது என்பது பேரவைத் தலைவரின் விருப்பம். காரணம் காட்டித்தான் மறுக்கப்பட்டு பதில் வந்திருக்கும். அதை அவையிலே சொல்லக் கூடாது. அந்தப் பிரச்னைக்கே பாயின்ட் ஆஃப் ஆர்டர் இல்லை.

(4) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) தமிழ்நாடு, 1977 ஆம் ஆண்டு, நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரியை நியமித்தல்) திருத்த சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, தமிழ் நாடு, 1977 ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரியை நியமித்தல்) திருத்த சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, இச்சட்ட முன்வடிவை நான் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

(ஆ) 1977 ஆம் ஆண்டு, கோயம்புத்தூர் நகராட்சி மன்றம் (தனி அதிகாரியை நியமித்தல்) திருத்த சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, 1977 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் நகராட்சி மன்றம் (தனி அதிகாரியை நியமித்தல்) திருத்த சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, இச்சட்ட முன்வடிவை நான் அறிமுகம் செய்கிறேன்.